# தமிழ்நாடு
# மாநில தேர்தல் ஆணையம்

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள்

## கையேடு – 5

# வேட்பாளர் கையேடு

## 2023

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023 –ன்படி
12.04.2023 வரை திருத்தங்கள் உள்ளடக்கியது)

# வேட்பாளர் கையேடு

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்
ஜவஹர்லால் நேரு சாலை (100 அடி சாலை)
அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்கள் : 2363 5010
நிகரி : 2363 8282 – 2363 8283
E-mail ID : tnsec@tn.nic.in
Web : www.tnsec.tn.nic.in

# கையேடு – 5

# வேட்பாளர் கையேடு

## உள்ளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பொது | 1 |
| 3. | தகுதி மற்றும் தகுதியின்மை | 1 |
| 4. | தேர்தல் அறிவிப்பு, தேர்தல் அட்டவணை மற்றும் வேட்பு மனு தாக்கல் | 3 |
| 5. | வேட்பு மனு பரிசீலனை | 5 |
| 6. | வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல் | 7 |
| 7. | சின்னங்கள் ஒதுக்கீடு | 8 |
| 8. | தேர்தல் முகவர் | 9 |
| 9. | வேட்பாளர்கள், தேர்தல் காலத்தில் செய்யத்தக்கவை மற்றும் செய்யத்தகாதவை | 9 |
| 10. | வாக்காளரை வாக்குக்காக அணுகும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில கட்டுப்பாடுகள் | 13 |
| 11. | வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கப்படுவோர் | 15 |
| 12. | வாக்குச்சாவடி முகவர்கள் | 16 |
| 13. | வாக்குச்சாவடி முகவரின் கடமைகள் | 17 |
| 14. | வாக்குச்சாவடி முகவர் கொண்டு வரவேண்டியவை | 17 |
| 15. | வாக்குகளை எண்ணுதல் | 18 |

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள்
# வேட்பாளர் கையேடு
# கையேடு – 5

முன்னுரை

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட விழையும் வேட்பாளர்கள், தேர்தல் களத்தை சந்திக்கும் முன் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களில் **வார்டு உறுப்பினர்** பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களாகிய உங்களுக்கு தேர்தல் குறித்த விவரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

## அத்தியாயம் – 1

## பொது

1.1 இட ஒதுக்கீடு

ஆதி திராவிட வகுப்பினருக்கும், பழங்குடியின வகுப்பினருக்கும் மற்றும் பெண்களுக்கும் மேயர் / தலைவர் மற்றும் உறுப்பினர் தேர்தல்களில் சட்டம்/விதிகளின்படி குறிப்பிட்ட விகிதத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது குறித்த விவரங்களை தேர்தல் அறிவிப்பிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**1.2 வாக்காளர் பட்டியல்**

நடப்பு சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற ஒவ்வொரு நபரும் அப்பகுதிக்குத் தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சி வார்டுகளின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற தகுதி படைத்தவராவார். ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பில் உள்ள அனைத்து வார்டுகளின் வாக்காளர் பட்டியல்களையும் ஒருங்கிணைத்தால் அதுவே அந்த உள்ளாட்சியின் முழு வாக்காளர் பட்டியல் ஆகும்.

## அத்தியாயம் – 2
## தகுதி மற்றும் தகுதியின்மை

**2.1.** நீங்கள் பேரூராட்சி / நகராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் மாநகராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். அதே நேரத்தில் கீழ்க்கண்ட தகுதியின்மை அற்றவராகவும் இருக்க வேண்டும்.

**2.2.** தகுதி

(அ) நீங்கள் எந்த பேரூராட்சி / நகராட்சி வார்டு உறுப்பினராக மற்றும் மாநகராட்சி வார்டு உறுப்பினராக போட்டியிட விரும்புகின்றீர்களோ, அந்த உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் ஏதாவது ஒரு வார்டில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) நீங்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் நாளன்று உங்களுக்கு 21 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

(இ) ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர் பதவிக்கு நீங்கள் போட்டியிட்டால் அந்தப் பதவி எந்த பிரிவினருக்கு (ஆதி திராவிடர்/பழங்குடியினர்) ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த

பிரிவினராகவும் மற்றும்/அல்லது பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால், பெண்ணாகவும் இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு :

ஒரு இடம் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் நீங்கள் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பினை சேர்ந்தவராகவும் பெண்ணாகவும் இருக்க வேண்டும்.

### 2.3 தகுதியின்மை

நீங்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் நாளன்று உங்களுக்கு கீழ்க்கண்ட தகுதியின்மைகள் இருக்கக் கூடாது.

(அ) நீங்கள் குற்றவியல் நீதிமன்றத்தால் ஆறு மாதத்திற்கு மேல் தண்டனை பெற்றிருப்பின் தண்டனை காலத்திலும் மற்றும் தண்டனை முடிவடைந்த நாளிலிருந்து ஆறு ஆண்டு காலத்திற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதி அற்றவராக கருதப்படுவீர்கள். மேலும், தேர்தல் குற்றச் செயலுக்காகவோ அல்லது இந்திய குற்ற தண்டனை விதி தொகுப்பு அத்தியாயம் IX-A–ன் கீழ் வரும் தேர்தல் குற்ற செயல்களுக்காகவோ தண்டனை பெற்றிருப்பின், நீங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவீர்கள்.

(ஆ) 1955–ம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (Protection of Civil Rights Act) தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது. அவ்வாறு பெற்றிருப்பின் தண்டனை பெற்ற நாளிலிருந்து ஆறு ஆண்டு காலத்திற்கு நீங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவீர்கள்.

(இ) தேர்தலில் போட்டியிடுபவர் மனநலம் குன்றியவராக இருக்கக் கூடாது.

(ஈ) நீங்கள், பெற்ற கடனைத் தீர்க்க வகையற்றவர் என மனு செய்துள்ளவராகவோ அல்லது தகுதி படைத்த நீதிமன்றத்தில் அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பவராகவோ இருக்கக் கூடாது.

(உ) நீங்கள் எந்த பேரூராட்சி / நகராட்சி / மாநகராட்சி வார்டு உறுப்பினராக போட்டியிட விரும்புகின்றீர்களோ அந்த நகர்ப்புற உள்ளாட்சியுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது பங்குதாரர் மூலமாகவோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் (“குடும்பம்” ஒரு நபரின் உறவு என்பது, ஒரு நபர், அவரது மனைவி அல்லது கணவர் அந்த நபர் மற்றும் மகன்கள், மருமகள்கள், திருமணமாகாத மகள்கள், சகோதரர், திருமணமாகாத சகோதரிகள், தந்தை மற்றும் தாய் என்பதை குறிக்கும்) மூலமாகவோ எந்த ஒரு வேலைக்கான அல்லது பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்ததாரராக இருக்கக் கூடாது.

(ஊ) சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சியை சேர்ந்த வழக்கறிஞர், வேட்பு மனு தாக்கல் செய்யும் நாளில் அவ்வுள்ளாட்சியின் சார்பில் ஆஜராகவோ அல்லது எதிராக வழக்காடுபவராகவோ இருக்கக்கூடாது.

(எ) நீங்கள், ஒரு மத்திய / மாநில உள்ளாட்சி முழுநேர அல்லது பகுதி நேர அரசு பணியாளராகவோ அல்லது அலுவலராகவோ இருக்கக் கூடாது.

(ஏ) நீங்கள், சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிக்கு சேர வேண்டிய தொகைகளை செலுத்தாமல் நிலுவையில் வைத்திருக்கக் கூடாது.

(ஐ) நீங்கள், சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்தின்படியும் விதிகளின்படியும் வேட்பாளருக்கான இதர தகுதிகள் அற்றவராக இருக்கக் கூடாது.

(ஒ) நீங்கள், சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்தின்படியும் விதிகளின்படியும் வேட்பாளருக்கான இதர தகுதியின்மை உடையவராக இருக்கக் கூடாது.

(ஓ) நீங்கள் சட்டமன்ற / பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட இயலாத தகுதியின்மை ஏதும் பெற்றிருத்தல் கூடாது.

(ஔ) நீங்கள் இதற்கு முன் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு வேட்பாளர் தேர்தல் செலவின கணக்கினை முறைப்படி உரிய காலத்தில் தாக்கல் செய்ய தவறியமைக்காக மாநில தேர்தல் ஆணையத்தால் தகுதி நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டவராயிருப்பின் மேற்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராவீர்.

(ஃ) நீங்கள் சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது பாராளுமன்ற இரு அவைகளின் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. (Loksabha and Rajyasabha)

## அத்தியாயம் – 3

## தேர்தல் அறிவிப்பு, தேர்தல் அட்டவணை மற்றும் வேட்புமனு தாக்கல்

3.1. (அ) மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு தேர்தல் அட்டவணைப்படி தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கும். அந்த அறிவிக்கையை தொடர்ந்து வெளியிடப்படும் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலரின் அறிவிப்பின்படி, வேட்பு மனுக்கள் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட தேதிகளில், குறிப்பிட்ட நேரத்தில் அதற்கென நியமதிக்கப்பட்ட அலுவலரால் பெறப்படும்.

(ஆ) வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளுக்கு அடுத்த நாள் (வேலை நாள்) வேட்பு மனுக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(இ) வேட்பாளர் விரும்பினால், பரிசீலனை நாளுக்கு பிறகு இரண்டாம் நாள் மாலை 3–00 மணிக்குள், வேட்புமனுவை திரும்ப பெறலாம்.

(ஈ) ஒரு பதவிக்கு அல்லது ஒரு இடத்திற்கு ஒரு நபர் மட்டுமே போட்டியிட்டால், அந்நபர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரு இடத்திற்குப் போட்டியிட்டால் அவர்களில் ஒருவரை வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பதற்காக, வாக்கெடுப்பு தேர்தல் அறிவிக்கையில் குறிப்பிட்ட நாளில் நடைபெறும்.

### 3.2. வேட்பு மனு தாக்கல்

(அ) நீங்கள் தேர்தல் அறிவிக்கையில் குறிப்பிட்ட நாட்களில் (பொது விடுமுறை நாட்களைத் தவிர) எந்த ஒரு நாளிலும் வேட்பு மனு தாக்கல் செய்யலாம்.

(ஆ) வேட்பு மனு, இதற்கென அறிவிக்கப்பட்ட படிவத்தில் இருக்க வேண்டும். இதற்கான படிவங்கள் தேர்தல் அலுவலர்களிடம் கிடைக்கும். அச்சிட்ட படிவம் கிடைக்கப் பெறாத நிலையில் குறிப்பிட்ட படிவத்தினைக் கையால் எழுதியோ, தட்டச்சு செய்தோ வேட்பு மனு தயாரித்து, தாக்கல் செய்யலாம். வேட்பு மனுவுடன் சேர்த்து உறுதிமொழி ஆவணத்தில் (Affidavit) விவரங்கள் அளிக்கப்பட வேண்டும். மேற்படி ஆணையுறுதி ஆவணம் இணைக்கப்படாமல் பெறப்படும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்படி ஆணையுறுதி ஆவணம் ரூ.20/–க்கு குறையாத முத்திரைத் தாளில் தயார் செய்யப்பட வேண்டும். சாற்றுரைஞர் (Notary Public) கையொப்பமிட்டதாக இருக்க வேண்டும்.

(இ) உங்களது பெயரை முன்மொழிபவரது பெயர், நீங்கள் எந்த உள்ளாட்சி வார்டிற்கு போட்டியிடுகின்றீர்களோ அந்த வார்டின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். ஒரு வாக்காளர் ஒரே தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு முன்மொழிபவராக இருக்கக்கூடாது.

(ஈ) ஒரே பதவியிடத்திற்கு நான்கு வேட்பு மனுக்கள் வரை தாக்கல் செய்யலாம்.

(உ) ஒவ்வொரு வேட்பு மனுவிலும் அத்தேர்தலில் போட்டியிடுகின்ற உங்களது ஒப்புதலை தெரிவிக்கும் வகையில் உரிய இடத்தில் நீங்கள் ஒப்பமிட வேண்டும்.

(ஊ) வேட்பு மனுவில் உங்களது வயதைக் குறிப்பிட தவற வேண்டாம். ஒதுக்கீடு செய்யப்பட்ட எந்த ஒரு பதவியிடத்திற்கும் நீங்கள் போட்டியிட்டால் தேர்தல் அறிவிப்பின்படி எந்த வகுப்பினருக்காக அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த வகுப்பைச் சார்ந்தவர் என்பதற்கு வேட்பு மனுவில் உறுதிமொழி தெரிவித்து நீங்கள் ஒப்பமிட வேண்டும்.

(எ) நீங்கள் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியின் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளராக இருந்தால், வேட்பு மனுவுடன் கூடிய “C” படிவத்தில் எந்த கட்சியின் சார்பாக நீங்கள் போட்டியிடுகிறீர்கள் என்பதை குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிட தவறினால் நீங்கள் சுயேட்சையாகவே கருதப்படுவீர்கள்.

(ஏ) நீங்கள் சுயேட்சை வேட்பாளராக இருந்தால், அத்தேர்தலுக்கென அறிவிக்கப்பட்ட சின்னங்களில் மூன்று தேர்தல் சின்னங்களை உங்கள் விருப்பத்திற்கிணங்க வரிசைப்படுத்தி கோரலாம்.

(ஐ) வேட்பு மனு தாக்கல் செய்யும் சமயம் நீங்கள் நிர்ணயிக்கப்பட்ட காப்புத் தொகையை (Deposit) ரொக்கமாக செலுத்தியோ அல்லது சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சியின் கணக்கில் செலுத்தி அச்செலுத்து சீட்டுடன் வேட்பு மனுவை தாக்கல் செய்ய வேண்டும். கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டவாறு காப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

<u>வார்டு உறுப்பினர் தேர்தல்</u>

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தவிர்த்த ஏனைய வேட்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| **அ.** | **பேரூராட்சி வார்டு உறுப்பினர்** | **1,000** |
| **ஆ.** | **நகராட்சி வார்டு உறுப்பினர்** | **2,000** |
| **இ.** | **மாநகராட்சி வார்டு உறுப்பினர்** | **4,000** |

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| **அ.** | **பேரூராட்சி வார்டு உறுப்பினர்** | **500** |
| **ஆ.** | **நகராட்சி வார்டு உறுப்பினர்** | **1,000** |
| **இ.** | **மாநகராட்சி வார்டு உறுப்பினர்** | **2,000** |

(மேற்குறிப்பிட்ட காப்பு தொகை கடைசி நேர மாறுதலுக்கு உட்பட்டதால் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக இதனை சரிபார்த்து கொள்ள வேண்டியது வேட்பாளரின் பொறுப்பாகும்)

(ஒ) நீங்கள் ஒரு பதவியிடத்திற்கு எத்தனை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தாலும் ஒரே ஒரு காப்பு தொகை மட்டும் செலுத்தினால் போதுமானது. முதன்முதலாக தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவுடன் காப்பு தொகை செலுத்தியதற்கான அசல் செலுத்து சீட்டை இணைத்தும், அதன் பின்பு தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவுடன் செலுத்துச்சீட்டின் நகலை இணைத்தும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்.

(ஓ) வேட்பு மனுவை நீங்களோ அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரோ சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலரிடம், நேரடியாக, குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனு தாக்கல் செய்ய வரும்பொழுது வேட்பாளரை முன்மொழிபவர் மற்றும் அவர் விரும்பும் மூன்று நபர்களை மட்டுமே அனுமதிக்கப்படுவர். வேட்பு மனு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். வேட்பு மனுவில் முன்மொழிபவரும் நீங்களும் ஒப்பமிட்டிருக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட நாட்களுக்கு அல்லது நேரங்களுக்கு முன்னரோ அல்லது பின்னரோ வேட்பு மனுக்கள் பெறப்பட மாட்டாது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

(ஔ) வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும்பொழுது நீங்களோ அல்லது உங்கள் வேட்பு மனுவை முன்மொழிபவரோ, தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ள எல்லா விவரங்களையும், குறிப்பாக உங்கள் பெயர் மற்றும் வாக்காளர் பட்டியல் எண் சரியாக உள்ளதா என்பதையும், அவை வாக்காளர் பட்டியலில் கண்ட விவரங்களுடன் ஒத்திருக்கிறதா என்பதையும் தேர்தல் அலுவலர் சரிபார்த்து திருப்திபடுத்திக் கொள்ள உதவி செய்ய வேண்டும்.

(க) தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில் அடித்தல், திருத்தல் மற்றும் பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வேட்பு மனுவில் கண்ட விபரங்களுக்கும் வாக்காளர் பட்டியலில் கண்ட விபரங்களுக்கும் அச்சுப்பிழை காரணமாகவோ எழுத்துப் பிழை காரணமாகவோ ஏதேனும் வேறுபாடு காணப்பட்டாலும், அவை முக்கிய ஐயப்பாட்டை ஏற்படுத்தாதிருக்குமானால் தேர்தல் அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்படும். இருந்தபோதிலும், நீங்கள் சிறப்பு கவனம் செலுத்தி வேட்பு மனுவை முறையாக தயாரித்து தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் சமயம் உங்களது வேட்பு மனுவின் தொடர் எண், தாக்கல் செய்யும் நேரம் மற்றும் நாள் குறித்து தேர்தல் அலுவலரிடமிருந்து ஒரு ஒப்புதல் கடிதத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதில் வேட்பு மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளும் நாள் மற்றும் நேரம் குறித்து ஒரு அறிவிப்பும் இருக்கும்.

(கா) தொடர்புடைய சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு குற்றச் செயலுக்காகவும் தண்டிக்கப்பட்டிருந்தால் தகுதியின்மையாக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளதால், தாங்கள் இது குறித்து விவரங்கள் அடங்கிய வேட்பு மனுவுடன் அளித்திடும் உறுதிமொழி ஆவணம் படிவம் 4-யும் வேட்பு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்திற்கு முன்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இது தொடர்பான படிவங்களையும் அவரிடமிருந்து பெற்று கொள்ளலாம்.

## அத்தியாயம் – 4

## வேட்பு மனு பரிசீலனை

4.1 வேட்பு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாளன்று, குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரால் உங்களது வேட்பு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அவர் இப்பணியை ஒரு நீதிபதியின் நிலையிலிருந்து செய்வார். அச்சமயம் அவர் கோரும் ஒத்துழைப்பை நீங்கள் நல்கி உதவ வேண்டும். பரிசீலனை தேர்தல் நடத்தும் அலுவலரால் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலரால் மட்டுமே செய்யப்படும். மேற்படி பரிசீலனையின்போது நீங்களோ, உங்களை முன்மொழிந்தவரோ மற்றும் நீங்கள் அங்கீகரித்த ஒரு நபரோ, தேர்தல் நடத்தும் அலுவலரின் பரிசீலனை நடவடிக்கைகளை கவனிக்கலாம். இம்மூவரை தவிர வேறொருவரும் இருக்கக்கூடாது. தேர்தல் நடத்தும் அலுவலர் ஒவ்வொரு வேட்புமனுவாக பரிசீலனை செய்யும்பொழுது, அந்த வேட்பு மனு குறித்து நீங்களும் ஏதாவது மறுப்பு தெரிவிக்க வேண்டியிருந்தால், அதனை எழுத்து மூலமாக தேர்தல் நடத்தும் அலுவலர் குறிப்பிடும் நேரத்திற்கு முன் தெரிவிக்க வேண்டும். உங்கள் வேட்புமனு குறித்து சக வேட்பாளர்கள் அல்லது அவரது சார்பாக முன்மொழிந்தவர்அல்லது அங்கீகரிக்கப்பட்டவர் ஆட்சேபணைகள் அல்லது மறுப்புரைகள் தாக்கல் செய்தால், அந்த ஆட்சேபணைகளை அல்லது மறுப்புரைகளை தேர்தல் நடத்தும் அலுவலர் நிர்ணயிக்கும் காலத்திற்குள் நீங்கள் முறியடிக்க வேண்டும். ஒரு வேட்பு மனு குறித்த மறுப்புரைகள் ஏற்கப்படின், தேர்தல் நடத்தும் அலுவலர் அந்த வேட்பு மனுவை நிராகரித்து ஆணையிடுவார். அவ்வாறு அவர் உத்தரவிடும் சமயம் எழுத்து மூலமாக அதற்கான காரணங்களை நீங்கள் கோரின் அவர் உங்களுக்கு தெரிவிப்பார்.

அவரது ஆணையே இறுதியானதாகும். வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால், உங்களால் தேர்தலில் போட்டியிட இயலாது. இது குறித்து திருப்தி அடையாவிட்டால் நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் நீதி மன்றத்தில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பிரசுரம் செய்த பின்னரே வழக்கு தொடர இயலும். எனவே, வேட்பு மனு பரிசீலனை செய்யப்படும் சமயம் விழிப்புடன் இருந்து உங்களது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படாமல் கவனித்து கொள்வது உங்களது பொறுப்பாகும்.

**4.2 வேட்பு மனு கீழ்க்கண்ட காரணங்களுக்காக நிராகரிக்கப்படலாம்.**

(அ) நீங்கள் வேட்பு மனு தாக்கல் செய்த நாளன்று உரிய தகுதியை பெறாமல் இருந்தால் அல்லது தகுதியின்மை உடையவராக இருந்தால்;

(ஆ) நீங்கள் அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரை தவிர ஏனைய பிறர் உங்களது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தால்;

(இ) தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தவிர மற்ற நபர்களிடம் நீங்களோ அல்லது முன்மொழிபவரோ உங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தால்;

(ஈ) தேர்தல் அறிவிக்கையில் குறிப்பிட்ட இடம் தவிர பிற இடங்களில் உங்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்தால் அல்லது வேட்பு மனு தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நாள் அல்லது நேரம் கடந்து வேட்பு மனு தாக்கல் செய்தால்;

(உ) வேட்பு மனு குறிப்பிட்ட படிவத்தில் இல்லாது இருந்தால்;

(ஊ) வேட்பு மனு முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால்;

(எ) வேட்பு மனு முறையாக பூர்த்தி செய்யப்படாது இருந்தால்;

(ஏ) வேட்பு மனுவில் நீங்களோ அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரோ ஒப்பமிட தவறியிருந்தால்;

(ஐ) வேட்பு மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டிய உறுதிமொழி ஆவணம் (Affidavit) ஒப்பமிட்டு இணைக்க தவறியிருந்தால்;

(ஒ) உரிய காப்பு தொகை செலுத்தாதிருந்தால்;

(ஓ) வேட்பு மனுவில் கண்டுள்ள வேட்பாளர் கையொப்பம் அல்லது முன்மொழிபவர் கையொப்பம் மெய்யானதாக இல்லாமலிருந்தால்;

(ஔ) நீங்கள் வேட்பு மனு செய்திருக்கும் பதவியிடம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்து அதற்கான தகுதி உங்களுக்கு இல்லாமலிருந்தால்;

(ஃ) உங்கள் பெயரை முன்மொழிபவர், நீங்கள் எந்த வார்டில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளீர்களோ அந்த வார்டின் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமல் இருந்தால்;

4.3 வேட்பு மனு பரிசீலனை செய்யப்படும் சமயம் உங்களது வேட்பு மனுக்கள் மீது எடுக்கப்படும் மறுப்புரைகள் அல்லது ஆட்சேபணைகள் குறித்து உங்கள் நிலைமையை ஆதாரத்துடன் நிரூபிப்பதற்கு நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களையும் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்:-

(அ) உங்கள் பெயர் மற்றும் உங்களை முன்மொழிபவர் பெயர் காணப்படும் வாக்காளர் பட்டியலின் அங்கீகரிக்கப்பட்ட நகல் அல்லது இது குறித்த சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியின் சான்று

(ஆ) உங்கள் வயது குறித்த விவரங்களை நிரூபிப்பதற்கு தேவையான சான்றுகள், ஆவணங்கள் (Documents)

(இ) காப்பு தொகை செலுத்தியதற்கான ரசீது மற்றும் அதன் நகல்கள்

(ஈ) தேர்தல் நடத்தும் அலுவலரால் உங்களுக்கு வழங்கப்பட்ட பரிசீலனை நாள் குறித்த அறிவிப்பு மற்றும் உங்களது வேட்பு மனு பெறப்பட்டமைக்கான ஒப்புதல்

(உ) ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பினை சேர்ந்தவராக இருப்பின் அதற்கான சான்று.

4.4. பரிசீலனை முடிந்தவுடன், தேர்தல் நடத்தும் அலுவலர் அனைத்து வேட்பு மனுக்கள் குறித்தும் எடுக்கப்பட்ட முடிவினை இறுதியாக்கி, முறைப்படி ஏற்று கொள்ளப்பட்ட வேட்பாளர் பட்டியலை (list of validly nominated candidates) வெளியிடுவார். உங்களது பெயர் தவறுதலாக வேட்பு மனுவில் எழுதப்பட்டிருந்தால் அல்லது எழுத்துப்பிழை இருந்தால் அது குறித்து எழுத்து மூலமாக ஒரு விண்ணப்பத்தை, வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதற்கு முன் அளித்து சரியான பெயரை அப்பட்டியலில் இடம் பெற செய்யலாம்.

## அத்தியாயம் – 5

## வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல்

உங்களுடைய வேட்பு மனு பரிசீலனையில் ஏற்று கொள்ளாவிட்டால் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது போல உங்கள் பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும். இந்நிலையில் நீங்கள் வேட்பு மனுவை திரும்ப பெற விரும்பினால் அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து ஒப்பமிட்டு நீங்களோ அல்லது உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட உங்கள் வேட்பு மனுவை முன்மொழிந்த நபரோ தேர்தல் நடத்தும் அலுவலரிடம் திரும்ப பெற நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளன்று பிற்பகல் 3 மணிக்குள் நேரடியாக தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு நீங்கள் வேட்பு மனுவை திரும்ப பெற்றால் இதற்கென ஒரு ஒப்புதலை தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பெற்று கொள்ள வேண்டும்.

எந்த நிலையிலும் வேட்பு மனுவை திரும்ப பெற்றபின் நீங்கள் திரும்ப பெற்ற அறிவிப்பை ரத்து செய்ய இயலாது. தேர்தலில் போட்டியிடவும் இயலாது. எனவே, இது குறித்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். வேட்பு மனுவை திரும்ப பெற நீங்கள் தாக்கல் செய்த அறிவிப்பினை பெற்று கொண்டமைக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அளிக்கும் ஒப்புதலுடன்தான் நீங்கள் உங்களது காப்பு தொகையை திரும்ப பெற இயலும் என்பதால் இவ்வொப்புதலை பெற தவற கூடாது. வேட்பு மனு திரும்ப பெற நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளன்று மாலை 3 மணிக்கு மேல் தேர்தல் நடத்தும் அலுவலர் யார்யாரெல்லாம் வேட்பு மனுக்களை திரும்ப பெற அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்று ஒரு அறிவிப்பையும் தன் அலுவலக விளம்பர பலகையில் வெளியிட்டு விளம்பரப்படுத்துவார். இவ்வறிவிப்பிற்கு பிறகு வெளியிடப்படும் இறுதி போட்டிக்கான வேட்பாளர் பட்டியலில் இடம் பெறும் நபர்களுக்கு மட்டுமே சின்னங்கள், உரிய விதிகளை அனுசரித்து வழங்கப்பட்டு பட்டியலில் பிரசுரிக்கப்படும்.

......

## அத்தியாயம் – 6

## சின்னங்கள் ஒதுக்கீடு

6.1. மாநில தேர்தல் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட "தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை"யின்படி நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**6.2. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு**

அ) இந்திய தேர்தல் ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் இம்மாநில அரசியல் கட்சிகளுக்கு மட்டும் அவ்வாணையத்தால் எந்தெந்த சின்னங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த சின்னங்கள் நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஒதுக்கப்படும். வேறு எவருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கான சின்னங்கள் ஒதுக்கப்பட மாட்டாது.

ஆ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை திரும்ப பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி நாளன்று மாலை 3.00 மணிக்குள் மேற்சொன்ன அரசியல் கட்சியின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது பிறிதொரு நிர்வாகி அல்லது அத்தகைய நிர்வாகியினால் அதிகாரமளிக்கப்பட்ட பிறிதொரு நபரிடமிருந்து படிவம் 'B'–ல் மேற்படி வேட்பாளர் மேற்படி அரசியல் கட்சியால் மேற்படி பதவியிடத்திற்கு வேட்பாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார் என்ற கடிதத்தை பெற்று தாக்கல் செய்ய வேண்டும். மேற்கண்ட படிவம் 'B' பிறிதொரு நபரால் கையொப்பமிடப்படும் பட்சத்தில் படிவம் 'B' அளிக்க அதிகாரம் அத்தாட்சி பெற்ற அத்தகைய பிறிதொரு நபரின் பெயர் மற்றும் மாதிரி கையொப்பம் ஆகிய தகவல்கள் அடங்கிய படிவம் 'A' நிரப்பப்பட்டு தொடர்புடைய கட்சியின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது பிறிதொரு நிர்வாகியினால் கையொப்பமிடப்பட்டு மேற்குறிப்பிட்ட கால அளவிற்குள் தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி வேட்பாளர் எந்த அரசியல் கட்சியின் சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளாரோ அந்த அரசியல் கட்சியின் அதிகாரப்பூர்வமான சின்னத்தை வேட்பு மனுவில் குறிப்பிட்டிருக்க வேண்டும். வேட்பு மனுவுடன் 'C' படிவத்தில் எந்த கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிடுகின்றீர்கள் என்பதை குறிப்பிட்டிருக்க வேண்டும். இவைகளை செய்ய தவறினால் நீங்கள் சுயேட்சை வேட்பாளராக கருதப்படுவீர்கள். மேலும் ஒரு அரசியல் கட்சி, ஆரம்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களை வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதித்திருந்தால், இறுதியில் ஒரே ஒரு வேட்பாளரை மட்டும் தான், அக்கட்சியின் அங்கீகாரம் பெற்ற வேட்பாளராக படிவம் 'A' மற்றும் 'B' வாயிலாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கவில்லையெனில், அக்கட்சியின் சார்பாக வேட்பு மனு தாக்கல் செய்த எவரும் அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் வேட்பாளர் என கருதப்பட மாட்டார். சுயேட்சை வேட்பாளர் என கருதப்பட்டு சுயேட்சை சின்னங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஒதுக்கப்படும்.

இ) சுயேட்சை வேட்பாளர்களுக்கு அவர்களது விருப்பத்தின் முன்னுரிமை அடிப்படையில்தான், சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சுயேட்சை வேட்பாளர்கள் முன்னுரிமை அடிப்படையில் ஒரே சின்னத்தை கோரியிருந்தால், அது குலுக்கல் முறையில் தீர்மானிக்கப்படும். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும்போது, ஒரு வேட்பாளருக்கு அவர் கோரியிருந்த எந்த ஒரு சின்னத்தையும் அளிக்க இயலாத நிலை ஏற்படுமானால், தேர்தல் நடத்தும் அலுவலர், பிற வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்த பின் எஞ்சியுள்ள சின்னங்களிலிருந்து குலுக்கல் முறையில் ஒரு சின்னத்தை தேர்ந்தெடுத்து அந்த வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்வார்.

**6.3.** பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு –

ஒரு பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் தான் எந்த கட்சியினால் நிறுத்தப்படும் வேட்பாளர் என்பதற்கான உறுதிமொழியினை படிவம் 'C'–ல் வேட்பு மனுவுடன் வழங்குதல் வேண்டும். மேலும், பத்தி 6.2.(ஆ)வில் குறிப்பிட்டுள்ளவாறு படிவம் 'B' மற்றும் படிவம் 'A' உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளருக்கு சின்னங்கள் ஒதுக்கீட்டில் சுயேட்சைகளினின்று முன்னுரிமை வழங்கப்படும். சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்படி சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

## அத்தியாயம் – 7
## தேர்தல் முகவர்

இறுதி பட்டியலில் இடம் பெற்ற வேட்பாளராகிய நீங்கள் உங்களுக்கென ஒரு தேர்தல் முகவரை உரிய படிவத்தில் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு விண்ணப்பித்து நியமித்து கொள்ளலாம். ஆனால், இது கட்டாயமான ஒன்றல்ல. நீங்கள் விரும்பினால் உங்களது தேர்தல் பணிகளுக்காக விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட எந்த ஒரு பணியையும் அவர் உங்களுக்காக ஆற்றலாம். இதற்கென உரிய படிவத்தை இரண்டு நகல்களில் பூர்த்தி செய்து ஒப்பமிட்டு அதில் உங்கள் முகவரின் புகைப்படத்தினை ஒட்டி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அளித்தால், உங்கள் படிவம் ஏற்று கொள்ளப்படின் தேர்தல் நடத்தும் அலுவலர் இரண்டு நகல்களில் ஒன்றை ஒப்பமிட்டு உங்களுக்கு திரும்ப அனுப்புவார். தேர்தல் நடத்தும் அலுவலர் ஒப்பமிட்ட இந்த நகலை தேர்தல் முகவர் எப்பொழுதும் தன் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

தேர்தல் முகவரை நியமிக்கும்போது மாநில அமைச்சர்கள், மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் துணை அமைச்சர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர்களை தேர்தல் முகவராக நியமனம் செய்திட அனுமதிக்கக் கூடாது.

## அத்தியாயம் – 8
## வேட்பாளர்கள், தேர்தல் காலத்தில் செய்யத்தக்கவை மற்றும் செய்யத்தகாதவை

1. நகர்ப்புற உள்ளாட்சிகள் தேர்தல் குறித்த சட்டம், விதிகள், செயல்முறைகள், அறிவுரைகள், நடைமுறைகள் மற்றும் பிற அறிவுரைகள் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

2. எந்த உள்ளாட்சி அமைப்பின் வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்குப் போட்டியிடுகின்றீர்களோ அந்த உள்ளாட்சி தொடர்புடைய முழுமைக்கும் வாக்காளர் பட்டியலைக் கைவசம் வைத்திருக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் பேரூராட்சி செயல் அலுவலர், நகராட்சி / மாநகராட்சி ஆணையாளர்களிடம் விலைக்குக் கிடைக்கும்.

3. உங்கள் பெயர் மற்றும் விவரங்கள், வாக்காளர் பட்டியலில் தவறேதுமின்றி சரியானபடி இடம் பெற்றுள்ளதா என்பதைத் தேர்தலில் போட்டியிட முன்கூட்டியே சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

4. தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் பற்றிச் சரியாக அறிந்து கொண்டு குறிப்பிட்ட தகுதிகள் உங்களுக்கு முழுமையாக உள்ளனவா என்பதையும் தகுதியின்மைகள் எதுவும் உங்களுக்கு இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டு வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டும். தகுதியின்மை ஏதும் இருந்தால் விதிகளின்படி இயன்ற இனங்களில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நாளுக்கு முன்பாக உங்களை தகுதி உள்ளவராக ஆக்கிக் கொண்டு பின்பு வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

5. வேட்புமனு தாக்கல் செய்வதற்கு உரிய படிவத்தை முன்கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்யவும் வேண்டும். உரிய இடங்களில் ஒப்பமிடவும் வேண்டும். உறுதிமொழிகளையும் அளிக்க வேண்டும். மேலும், தொடர்புடைய சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு குற்ற செயலுக்காகவும், தண்டிக்கப்பட்டிருந்தால் தகுதியின்மையாக்கிட வகை செய்யப்பட்டுள்ளதால், தாங்கள் இது குறித்து விவரங்கள் அடங்கிய வேட்பு மனுவுடன் அளித்திடும் உறுதிமொழி ஆவணம் படிவம் 4–யும் , வேட்புமனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்திற்கு முன்பாகத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். (இது தொடர்பான படிவங்களை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்).

6. வேட்புமனுவை நீங்களே நேரடியாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நிர்ணயிக்கப்பட்ட நாளில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். இயலாவிடின் மேற்படி காலத்தில் உங்கள் பெயரை முன்மொழிபவர் மூலம் தாக்கல் செய்ய வேண்டும்.

7. உங்கள் பெயரை முன்மொழிபவர், நீங்கள் எந்த வார்டிற்கு வேட்புமனு தாக்கல் செய்கிறீர்களோ அந்த வார்டுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளாரா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

8. ஒரு வேட்புமனுவுக்கு மேல் தாக்கல் செய்ய நீங்கள் விரும்பினால் நான்கு வேட்பு மனுக்கள் வரை வெவ்வேறு முன்மொழிபவர்கள் மூலம் தாக்கல் செய்யலாம்.

9. பொதுவாக வேட்புமனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மட்டுமே தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட இடத்தில் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்ய வேண்டும். எனினும், தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்புமனுவைப் பெற்றுக் கொள்ள உதவித் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அங்கீகாரம் அளித்திருந்தால் அவரிடத்திலும் வேட்புமனுவைத் தாக்கல் செய்யலாம்.

10. வேட்புமனுவுடன் நிர்ணயிக்கப்பட்ட காப்புத் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும் அல்லது செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டினை இணைக்க வேண்டும்.

11. வேட்புமனு தாக்கல் செய்வதற்கான ஒப்புதல் மற்றும் வேட்புமனு பரிசீலனைக்கான அறிவிப்பினைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. வேட்புமனு பரிசீலனை நாளன்று கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட இடத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பரிசீலனையில் கலந்து கொள்ள வேண்டும். பரிசீலனை முடிந்தபின் உங்கள் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும், ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

13. சின்னம் ஒதுக்கப்படுவது சம்பந்தமாக நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளராக இருப்பின், தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்களை ('A' மற்றும் 'B' படிவங்கள்) குறித்த காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதா என உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவ்வாறு தாக்கல் செய்யத் தவறினால் நீங்கள் சுயேட்சை வேட்பாளராகக் கருதப்பட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு சுயேட்சை சின்னம் ஒதுக்கப்படும்.

14. வாக்கெடுப்பு நாள் குறித்த அறிவிப்பையும் வாக்கெடுப்பு நேரம் குறித்த விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

15. தேர்தல் முகவரை நியமித்து கொள்ள முறைப்படி உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

16. வாக்குச்சாவடியின் விவரங்களையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

17. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி முகவர் ஒருவரை (தேவையானால் ஒன்று அல்லது இரண்டு விடுவிப்பு முகவர்களை) நீங்கள் நியமிக்கலாம். இது உரிய படிவத்தில் இருக்க வேண்டும்.

18. வாக்குச்சாவடி முகவர்களுக்கு வசதியாக அவரவர் பணியாற்றும் வாக்குச்சாவடிக்கு உரிய வாக்காளர் பட்டியலின் நகல் ஒன்றை அளிக்க வேண்டும்.

19. வாக்காளர்களுக்கு அடையாள சீட்டு அளிக்க விரும்பினால் உங்கள் பெயரையும், சின்னத்தையும் குறிப்பிடாமல், வெள்ளைத்தாளில் வாக்காளர் குறித்த விவரங்களை மட்டும் எழுதி வேண்டுகோள், கோரிக்கை எதுவுமின்றி அனுப்ப வேண்டும்.

20. நீங்கள் விரும்பினால், வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் பணிக்கு, வாக்கு எண்ணும் மேசைக்கு ஒருவர் வீதம் முகவர்களை நியமிக்கலாம்.

21. வாக்கு எண்ணும் பணியை நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ நேரடியாக கண்காணிக்கலாம்.

22. வாக்காளர்களுக்கு பரிசு பொருட்களோ, அச்சுறுத்தல்களோ இன்றி வாக்கு சேகரிக்கும் பணியை செய்ய வேண்டும்.

23. ஒருவரை தேர்தலில் போட்டியிடுவதனின்று தவிர்க்கவோ அல்லது போட்டியிட செய்யவோ முறையற்ற வழிகளை கையாளக்கூடாது. வாக்காளர் எவரையும் வாக்களிக்க செய்வதற்காக அல்லது வாக்கு அளிப்பதினின்றும் தடுப்பதற்காக எந்த ஒரு முறையற்ற செயலையும் செய்யக்கூடாது. சகவேட்பாளர் எவரையும் தேர்தலில் போட்டியிடுவதினின்றும் தவிர்ப்பதற்காக வேட்புமனுவை திரும்ப பெற நிர்ப்பந்திக்கவோ அல்லது இதற்காக முறையற்ற செயல்களில் ஈடுபடவோ கூடாது.

24. நியாயமான, முறையான தேர்தல்கள் நடைபெறுவதற்கு உதவ வேண்டும்.

25. நேர்மையற்ற வழிகளிலும், முறையற்ற செயல்களிலும் ஈடுபட்டு, அமைதியாக நடக்கும் தேர்தல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊறு விளைவிக்கக் கூடாது.

26. வாக்காளர்களின் மத இன, சாதி மற்றும் மொழி உணர்வுகளை தூண்டி வாக்கு அளிக்க செய்யவோ அல்லது வாக்கு அளிப்பதைத் தடுக்கவோ முயலக்கூடாது.

27. சமய உணர்வுகளை தூண்டியோ அல்லது சமய சின்னங்களை பயன்படுத்தியோ வாக்கு சேகரிக்கவோ வேண்டுகோள் விடுக்கவோ கூடாது.

28. வாக்காளர்கள் மத்தியில் மத, இன, சாதி, வகுப்பு, மொழி போன்ற பாகுபாடுகளின் அடிப்படையில் விரோதத்தையும், வெறுப்பையும் வளர்த்து அதன் மூலமாக வாக்குகள் பெறும் முயற்சியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாது.

29. சக வேட்பாளர்களின் சொந்த விசயங்கள் மற்றும் அவர்களது நடத்தை குறித்து பிரச்சாரம் எதுவும் மேற்கொள்வது கூடாது.

30. வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு கொண்டு செல்ல வாகனங்கள் எவற்றையும் வாடகைக்கு அமர்த்தவோ அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவோ கூடாது.

31. ஒவ்வொரு தேர்தலுக்கெனவும் நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் செலவினங்களுக்கு மேல் செலவு செய்யக்கூடாது. அத்தேர்தல்களுக்கு செலவழிக்கப்படும் தொகைக்கு முறைப்படி கணக்குகள் பராமரித்து கணக்குகளின் நகலை தேர்தல் முடிவு அறிவிப்பு செய்யப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய அலுவலருக்கு குறிப்பிட்ட படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

32. அரசு அலுவலர்கள் எவரையும் வாக்கு சேகரிப்பதற்கோ அல்லது வாக்காளர்களை ஈர்ப்பதற்கோ பயன்படுத்தக்கூடாது.

33. வாக்குச்சாவடிகளுக்குள்ளும் வாக்குச்சாவடியின் அண்மையிலும் முறையாக நடந்து கொள்ள வேண்டும்.

34. வாக்குச்சாவடிக்கு உள்ளும் வெளியிலும் குழப்பத்தையோ அல்லது கலவரத்தையோ ஏற்படுத்தும் வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடுதல் கூடாது.

35. வாக்கெடுப்பு பகுதியில் வாக்கெடுப்பு முடிவடைவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக தேர்தல் கூட்டங்கள் எதையும் நடத்தவோ, அல்லது அதற்கான ஏற்பாட்டை செய்யவோ கூடாது.

36. சக வேட்பாளர்களின் தேர்தல் கூட்டங்களுக்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ இடையூறு எதுவும் விளைவிக்க கூடாது.

37. வாக்குச்சாவடியின் 100 மீட்டர் சுற்றளவிற்குள் தேர்தல் நாளன்று வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட கூடாது.

38. தேர்தல் நடத்தும் அலுவலர் வெளியிடும் எந்த அறிவிப்பையும் முறையற்ற வழியில் திருத்துவதோ, மாற்றுவதோ, ஊறுவிளைவிப்பதோ, கிழிப்பதோ தேர்தல் குற்றம் ஆகும்.

39. வாக்கு சீட்டை/வாக்குப்பதிவு கருவியினை வாக்குச்சாவடியிலிருந்து எடுத்து செல்வதும் எடுத்து செல்ல உதவி செய்வதும் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதும் குற்றமாகும்.

40. வாக்குப்பதிவு இயந்திரத்தினை முறையற்ற வகையில் கையாள்வது அல்லது சேதப்படுத்துவது அல்லது கைப்பற்றுவது போன்ற செயல்களில் ஈடுபடுவது தவறாகும்.

41. வாக்குச்சாவடியின் சுவர்களிலோ அல்லது அதன் 100 மீட்டர் சுற்று பகுதியிலோ எந்தவிதமான தேர்தல் விளம்பரங்களும் செய்யக்கூடாது.

42. வாக்குச்சாவடியில் வேட்பாளர், அவர் தம் முகவர்கள் கைப்பேசி (Cell Phone) பயன்படுத்திட அனுமதி இல்லை.

43. வாக்குப்பதிவிற்கு இடையூறாக செயல்படுவதும் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதும் குற்றம் ஆகும்.

44. வாக்குப்பதிவு கருவிக்கு அல்லது அவற்றின் மீதான முத்திரைக்கோ, வாக்கெடுப்பு பணிகளுக்கோ பங்கம் விளைவிக்கக்கூடாது.

45. சக வேட்பாளர்கள் குறித்து தவறான எந்த ஒரு அறிவிப்பையும் அச்சிட்டோ அல்லது எழுதியோ வெளியிடுதல் கூடாது.

46. ஆள்மாறாட்டம் செய்வதை மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஊக்குவித்தல் கூடாது.

47. தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர் எவருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடையூறாகவோ அல்லது அச்சுறுத்துவதாகவோ செயல்படுதல் கூடாது.

48. தங்கள் பெயரிலோ, கட்சிகள் பெயரிலோ மற்றும் அதன் தொடர்பான அனைத்துவிதமான வாசகங்கள் அச்சிடப்பட்ட எவ்விதமான விளம்பரத்தட்டிகளோ (Posters), விளம்பரப்பட்டிகைகளோ (Banners/Digital Banners) சுவரொட்டிகளோ விளம்பரப் படங்களோ (cut-outs) சுவரில் எழுதப்பட்டோ மாநிலத்தின் எவ்விடத்திலும் இருத்தல் கூடாது.

## அத்தியாயம் – 9

# வாக்காளரை வாக்குக்காக அணுகும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில கட்டுப்பாடுகள்

1. வாக்கெடுப்பு தினத்தன்று வாக்குச்சாவடிக்குள்ளும் வாக்குச்சாவடி பகுதியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள்ளும் வாக்கு சேகரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

2. மேலும், எந்த ஒரு நபரும் கீழ்க்கண்ட செயல்களை செய்யக்கூடாது.

   அ. வாக்கு சேகரிப்பதில் வாக்காளர்களை நிர்ப்பந்தித்தல், அச்சுறுத்தல், மிரட்டுதல், வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு செல்வதினின்றும் தடுத்தல்.

   ஆ. வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் தேர்தல் அலுவலகங்கள் அமைத்தல்.

இ. வாக்குச்சாவடிக்கு அருகாமையில் அறிவிப்பு எதையும் ஒப்பமிட்டோ, ஒப்பமிடாமலோ, அச்சடித்தோ, கையால் எழுதியோ வெளியிடுதல்.

ஈ. ஒலிபெருக்கி மூலமாக மேற்படி பகுதியில் ஓசை எழுப்புதல், கூச்சல் மற்றும் குழப்பம் ஏற்படுத்துதல் போன்ற தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

உ. தேர்தல் தினத்தன்று வாக்காளர்களுக்கு உணவு அளித்தல், மது மற்றும் போதை பொருட்களை வழங்குதல்.

ஊ. வாக்குச்சாவடிக்கு செல்வதற்காக வாக்காளர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்தி தருதல்.

3. (i) தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதிலிருந்து தொடங்கி, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள்வரை, தேர்தல் காலம் முழுவதும் தேர்தல் பிரச்சாரங்களுக்காக எந்தவொருவகை வாகனங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகளை காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றது. எந்தப் பகுதியிலும், வாகனங்களில் பொருத்தப்பட்டு இயங்கும் ஒலிபெருக்கிகள் காலை 6 மணிக்கு முன்னரும் இரவு 10 மணிக்குப் பின்னரும் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) யாதொரு பொதுக் கூட்டங்களுக்கு அல்லது ஊர்வலங்களுக்கு நிலையான ஒலிபெருக்கிகளை பயன்படுத்த வேண்டுமாயின் காவல்துறை அலுவலரின் எழுத்து மூலமான முன் அனுமதி பெற வேண்டும். திட்டவட்டமான முன் அனுமதி அளிக்கையில், பொது அமைதிக்கு இடையூறு ஏற்படாது என்றும் எந்நேரத்திற்குள், எவ்வகை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகின்றதோ அத்தகைய கால நேரங்கள் கண்டிப்பாக வரையறுக்கப்படுகின்றன என்பதையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஐயமறத் தெளிந்து அதனை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதே நேரத்தில், இத்தகைய அனுமதி வழங்குகையில், எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் ஆதரவு அல்லது பாரபட்சம் காட்டப்பட்டது என்ற புகாருக்கு இடமளிக்காதவாறு உறுதி செய்ய வேண்டும்.

(iii) அனைத்து ஒலிபெருக்கிகளும், பொது பிரச்சாரத்திற்கு அல்லது பொதுக் கூட்டங்களுக்கு அல்லது ஊர்வலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலும், நடமாடும் வண்டிகளில் அல்லது வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலும், அவை மேற்சொன்ன (i) மற்றும் (ii) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்ட நேரங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட நேரங்களுக்கு மேற்பட்ட மற்ற நேரங்களில் பயன்படுத்தப்படக் கூடாது.

(iv) மேற்சொன்னவாறு வரையறுக்கப்பட்ட நேரங்களுக்கு அப்பாலும் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் எழுத்துமூலமான அனுமதியின்றி பயன்படுத்தப்படும் அனைத்து ஒலிபெருக்கிகளும், அதனைப் பயன்படுத்துவதற்கு தொடர்புடைய அனைத்து கருவிகளுடன் பறிமுதல் செய்யப்படும்.

(v) டிரக்குகள், டெம்போக்கள், கார்கள், வாடகைக் கார்கள், வேன்கள், முச்சக்கர வண்டிகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள் முதலியன உட்பட ஆனால் அவைகுறித்து வரையறுக்கப்படாத நடமாடும் வண்டிகளில் ஒலிபெருக்கிகளை பயன்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், வேறு நபர்கள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கும் அதிகாரிகளிடம் அந்த வாகனங்களின் பதிவு எண்களை / அடையாள எண்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கும் ஆணையில் குறிப்பிடப்பட்டு பெற வேண்டும்.

(vi) மேற்சொன்ன எழுத்துமூலமான அனுமதியின்றி (Permission) பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகள் உள்ள யாதொரு வாகனம், ஒலிபெருக்கிகளுடனும் அதனுடன் இணைந்த கருவிகளுடனும் பறிமுதல் செய்யப்படும்.

(vii) நடமாடும் வண்டிகளிலோ அல்லது நிலையான இடத்திலோ ஒலிபெருக்கிகளை பயன்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், மற்றவர்கள் அது குறித்து

(1) அந்த உள்ளாட்சியின் தேர்தல் நடத்தும் அதிகாரியிடமும் (2) உள்ளூர் காவல்துறை அதிகாரிகளிடமும் அந்த ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட அனுமதிகளின் முழு விவரங்களை எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். நடமாடும் ஒலிபெருக்கிகளைப் பொறுத்த வரையில், அவை பொருத்தப்பட்ட வாகனங்களின் பதிவு எண்கள் / அடையாள எண்களை தேர்தல் நடத்தும் அலுவலர்களிடமும் உள்ளூர் காவல்துறை அதிகாரியிடமும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(viii) மேற்குறிப்பிட்ட ஆணைகளை மீறி எவரும் எந்த ஒலிபெருக்கிகளையும் பயன்படுத்தாமல் இருப்பதைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவது ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காக அனுமதி வழங்கும் அலுவலர்கள் உள்ளூர் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் முழுப் பொறுப்பாகும்.

4. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத ஆனால் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கான அனுமதிகள் தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். அவைகளின் பட்டியல் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும்.

## அத்தியாயம் – 10

### வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கப்படுவோர்

வாக்குச்சாவடியினுள் கீழ்க்கண்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

1. வாக்கெடுப்பு பணியாளர்கள்.
2. வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர், வாக்குச்சாவடி முகவர்.
3. வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள்.
4. வாக்காளர்களுடன் வரும் கைக்குழந்தை.
5. மாற்றுத் திறனாளி, கண் பார்வை இழந்த வாக்காளர்களை வழி நடத்தும் ஒரு நபர்.
6. வாக்காளர்களை அடையாளம் காட்டும் பொது பணியாளர் அல்லது ஒழுங்கை நிலைநாட்ட வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அழைத்தால் வரும் காவலர் அல்லது பணியிலுள்ள வேறு ஒரு அலுவலர்.
7. மாநில தேர்தல் ஆணையத்தால் அல்லது மாவட்ட தேர்தல் அதிகாரியால் அனுமதி அளிக்கப்பட்ட எந்த ஒரு நபர்.

## அத்தியாயம் – 11

## வாக்குச்சாவடி முகவர்கள்

**11.1.** உங்கள் வாக்கெடுப்புப் பகுதியிலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்கெடுக்கும் நேரத்தில் உங்களால் நேரடியாகக் கலந்துகொள்ள இயலாது என்பதால் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உங்கள் சார்பாக ஒரு வாக்குச்சாவடி முகவரை நீங்கள் நியமித்துக் கொள்ளலாம் என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டத்தையும், விதிகளையும் அனுசரித்து தகுதியுள்ள நபர் ஒருவரை நீங்கள் முறைப்படி, உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பி அவரது அனுமதி பெற்று ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச்சாவடி முகவரையும் தேவையானால் அவருக்கு மாற்றாக ஒன்று அல்லது இரண்டு விடுவிப்பு முகவர்களையும் நீங்கள் நியமித்துக் கொள்ளலாம். எனினும் ஒரு நேரத்தில் ஒரு முகவர் மட்டுமே உங்கள் சார்பாக ஒரு வாக்குச்சாவடியில் இருக்கலாம். மேற்படி வாக்குச்சாவடி முகவர் உரிய படிவத்தில் நீங்கள் ஒப்பமிட்ட அல்லது உங்களுடைய தேர்தல் முகவர் ஒப்பமிட்ட நியமன பத்திரத்தை வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் முன்பாக வாக்குச்சாவடி முகவர் ஒப்பமிட வேண்டும். மேற்படி ஒப்பமும், அவர் உங்கள் முன்பு இட்ட ஒப்பமும், ஒத்திருக்க வேண்டும். இரண்டு ஒப்பங்களும் ஒத்திருந்தால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அவரை வாக்குச்சாவடி முகவராக பணியாற்ற அனுமதிப்பார்.

**11.2.** வாக்குச்சாவடி முகவர், வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே வாக்குச்சாவடிக்கு சென்றுவிட வேண்டும். இதனால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வாக்குப்பதிவு கருவிகளை வாக்கெடுப்புக்காகத் தயார் செய்வதை நேரடியாகக் கண்காணிப்பதுடன் கட்டுப்பாட்டுக் கருவியின் உட்புறம் வைக்கப்படும் தாள் முத்திரையில் முகவர் ஒப்பம் இடவும் இயலும். அவ்வாக்குச்சாவடிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகளின் முதல் எண்ணையும், கடைசி எண்ணையும், வாக்கெடுப்பு முகவர்கள் வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வாக்கெடுப்பு முகவர்கள் உணவிற்காகவோ ஏனைய காரணங்களுக்காகவோ வெளியே செல்ல நேரிடின் அவர்களுக்கு அனுமதிச்சீட்டு ஒன்று வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வழங்கப்படும். மேற்படி அனுமதிச்சீட்டை உபயோகப்படுத்தித்தான் வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடியை விட்டு வெளியே செல்லவோ, உள்ளே நுழையவோ, இயலும் என்பதால் அனுமதிச் சீட்டை பத்திரமாக வைத்திருந்து காவலர் கோரும் சமயமோ அல்லது வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்கெடுப்பு அலுவலர்கள் கோரும் சமயமோ காண்பிக்க வேண்டும். ஒரு வாக்குச்சாவடி முகவர் வெளியே சென்றால் அவருக்குப்பதிலாக மாற்று முகவர் பணியாற்ற அனுமதிக்கப்படுவார். எந்த ஒரு நேரத்திலும், உங்களுக்காக ஒரே ஒரு முகவர் மட்டும் வாக்குச்சாவடிக்குள் இருக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வாக்குச்சாவடியின் அமைதியான வாக்கெடுப்பு பணிகளுக்கோ அல்லது முறையான செயல்களுக்கோ குந்தகம் விளைவிக்கும் எந்த முகவரும் வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வெளியேற்றப்படலாம் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வாக்குச்சாவடி முகவர் வாக்கெடுப்பு ஆரம்பிக்கும் ஒரு மணிநேரத்திற்கு முன்பாக வருகை தராவிட்டால், அந்த வாக்குச்சாவடியில் அவர் வருகை தராதபொழுது நடந்த எந்த ஒரு சட்ட ரீதியான செயலும் திரும்ப அவருக்காக நடத்தப்படமாட்டாது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் – 12

### வாக்குச்சாவடி முகவரின் கடமைகள்

12.1. பொதுவாக உங்கள் தேர்தல் பணியில் உங்கள் சார்பாக செயல்படவும், உங்களுக்கு உதவிபுரியவும் வாக்குச்சாவடி முகவர் உங்களால் நியமிக்கப்படுகிறார். அவர்,

அ. ஆள் மாறாட்டம் இருப்பின் வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு சென்று ஆள்மாறாட்டம் செய்வதைத் தவிர்க்க உதவலாம்.

ஆ. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகள் / வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் தாள் முத்திரை ஆகியவற்றின் வரிசை எண்களைக் குறித்துக்கொள்ளலாம்.

இ. வாக்கெடுப்பு முடிந்த பின்பு, அந்த வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுகள் / வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் தாள் முத்திரைகள் வரிசை எண்களைக் குறித்துக் கொள்ளலாம்.

ஈ. வாக்குப்பதிவு கருவிகள் வாக்கெடுப்புக்காகத் தயார் செய்யப்படுமுன் அவற்றுள், விதிமுறைகளின் கீழ் இருக்க வேண்டிய அடையாள அட்டைத் துண்டுத் தவிர, வேறு எதுவும் இல்லை என்பதைப் பார்வையிட்டு உறுதி செய்து கொள்ளலாம்.

உ. வாக்குப்பதிவு கருவிகள் வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பும் வாக்கெடுப்பு முடிந்த பின்பும் முறையாக முத்திரை இடப்படுவதை உறுதி செய்துகொள்வதுடன் விரும்பினால் தன் முத்திரையையும் அதில் பதிக்கலாம்.

ஆனால் வாக்கெடுப்பு முகவர் அவ்வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுகளின் / வாக்குப்பதிவு கருவிகளின் எண்களைக் குறித்து கொள்ளலாம். ஒவ்வொரு வாக்காளரும் யாருக்கு வாக்களிக்கின்றனர் என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்வதோ, மறைமுகமாக அறிய முயற்சிப்பதோ கூடாது.

12.2. வாக்குச்சாவடி முகவர் வேட்பாளரின் பெயர் மற்றும் அவரது தேர்தல் சின்னம் அடங்கிய எதையும் வைத்து கொண்டு வாக்குச்சாவடியினுள் பணியாற்றக்கூடாது.

12.3. வாக்காளர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ (சைகை மூலமாகவோ அல்லது சங்கேதக் குறிகள் மூலமாகவோ) எந்த ஒரு சின்னத்திலும் வாக்களிக்கத் தூண்டக்கூடாது.

## அத்தியாயம் – 13

### வாக்குச்சாவடி முகவர் கொண்டு வரவேண்டியவை

வாக்குச்சாவடி முகவர் வாக்குச்சாவடி பணிக்கு வரும்பொழுது அவரது நியமன ஆணையுடன் கீழ்க்கண்டவற்றையும் கொண்டு வரலாம்.

அ. அவ்வாக்குச்சாவடி சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியல்.

ஆ. அவ்வாக்கெடுப்பு பகுதியில் இறந்துவிட்ட, அப்பகுதியை விட்டு வெளியேறிய வாக்காளர்கள் விவரம்.

இ. அவரது உலோக முத்திரை (மோதிரம் தவிர) பேனா, பென்சில், தாள் போன்றவை.

## அத்தியாயம் – 14
## வாக்குகளை எண்ணுதல்

**14.1.** வாக்கு எண்ணுகை எந்த நாளில் எந்த நேரம் தொடங்கி, எந்த இடத்தில் எண்ணப்படும் என்பது உங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். வாக்கு எண்ணும் இடத்தில் நீங்களும், உங்கள் தேர்தல் முகவரும் இருக்கலாம். ஒரு மேசைக்கு ஒரு முகவர் என்ற விகிதத்தில் நீங்கள் வாக்கு எண்ணும் மையத்திற்கான முகவர்களை நியமிக்கலாம். இதற்கென உள்ள படிவத்தை பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலரின் முன் ஒப்புதல் பெற வேண்டும். மேலும், அப்படிவத்தில் முகவருடைய நிழற்படம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

14.2. நீங்களோ உங்கள் வாக்கு எண்ணுமிடத்து முகவரோ குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே வாக்குகள் எண்ணும் இடத்தில் கூடுவது நலம். வாக்குப்பதிவு இயந்திரங்கள் எத்தகைய சேதாரமோ, மாற்றங்களோ (tampering) இன்றி உள்ளனவா என்பதையும், தாள் முத்திரை சரியாக உள்ளனவா என்றும் மேலும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூடி முத்திரையிடப்பட்டபின் திறக்கப்பட்டதற்கான தடயங்கள் ஏதுமின்றி உள்ளனவா என்பதையும், நீங்களும் உங்களுடைய முகவர்களும் பார்க்கலாம். வாக்குப்பதிவு கருவிகள் திறக்கப்பட்டு வாக்குகள் உரிய முறையில் எண்ணப்படுகின்றனவா என்பதையும் பார்க்கலாம்.

14.3. வாக்கு எண்ணுமிடத்தில் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ள வேண்டும். வாக்கு எண்ணுகைக்கு ஊறு விளைவிப்பது குற்றமாகும்.

14.4. வாக்கு எண்ணும் மையங்களில் நீங்களோ உங்கள் வாக்கு எண்ணுமிடத்து முகவரோ கைபேசி (Cell Phone) பயன்படுத்திட அனுமதி இல்லை.

14.5. உங்கள் முகவர்களுக்கான சிற்றுண்டியையும், உணவையும் ஏற்பாடு செய்வது உங்கள் பொறுப்பாகும்.

14.6. நீங்கள் விரும்பினால் வாக்குகளின் கணக்கையும், எந்தெந்த வேட்பாளருக்கு எத்தனை வாக்குகள் பதிவாகியுள்ளன என்ற விபரத்தையும், குறித்துக் கொள்ளலாம். இதற்கான விவரங்களடங்கிய படிவங்களின்படி குறிப்பெடுத்து கொள்ளலாம்.

14.7. நீங்களே அதிகப்படியான வாக்குகளை பெற்ற வேட்பாளரானால், தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் அடங்கிய தேர்தல் விவரப்பட்டியலையும் நீங்களே வெற்றி பெற்ற வேட்பாளர் என்ற அதிகாரபூர்வமான அறிவிப்பினையும் உரிய படிவத்தில் உங்களுக்கு தருவார்.

### முடிவுரை

மக்களாட்சியின் நாற்றங்கால்தான் உள்ளாட்சி அமைப்புகள், அவ்வமைப்புகளை, முறையாக நிறுவ தேவைப்படும் பொறுப்பாளர்களை, தலைவர்களை தேர்ந்தெடுக்கத்தான் இத்தேர்தல்கள். அதுவும் மக்களை பங்கு பெற செய்யும் மக்களாட்சி தேர்தல்கள். இத்தேர்தலில் பங்கு பெறுவோரின் கடமையையும், உரிமையையும், பொறுப்பையும் மாநில தேர்தல் ஆணையம் கோடிட்டு காட்டியுள்ளது. இச்சிறு கையேட்டை உணர்ந்து படித்து, நியாயமான, முறையான, நேர்மையான, அமைதியான முறையில் தேர்தலை நடத்த ஒத்துழையுங்கள்.

*******